## தமிழ்நாடு அரசு

### வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **யூனியன் பிரதேசங்கள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# யூனியன் பிரதேசங்கள்

இந்திய அரசமைப்பின் பகுதி VIII, யூனியன் பிரதேசங்கள் (Union Territories) குறித்த சட்ட வாசகங்களைக் கொண்டுள்ளது. உறுப்புகள் 239, 239A, 239AA, 239AB, 239B, 240 மற்றும் 241 ஆகியவை இவை.

யூனியன் பிரதேசங்களைக் குறித்து, இந்திய அரசமைப்பு, மாநிலங்களிலிருந்த வேறுபட்ட தகுநிலையை அளித்துள்ளது. யூனியன் நிர்வாகமும், நாடாளுமன்றமும் யூனியன் பிரதேசங்களைக் குறித்து மேலாண்மை கொண்டுள்ளன. மேலும் குடியரசுத் தலைவருக்குச் சில சிறப்பு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ன.

**யூனியன் பிரதேசங்களின் நிர்வாகம்**

ஒரு யூனியன் பிரதேசமானது குடியரசுத் தலைவரால் நேரடியாக ஆளப்படும் என உறுப்பு 239 உரைக்கிறது. இதனைக் குடியரசுத் தலைவர், ஆட்சியாளர் என்று (Administrator) நியமிக்கப்படும் ஒருவரால் அவர் நிர்வகிக்கிறார். குடியரசுத் தலைவர், யூனியனின் நிர்வாகத் தலைவர் என்ற முறையில் அன்றி, உறுப்பு 239இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி யூனியன் பிரதேசத்தின் தலைவர் என்ற முறையில் செயல் புரிகிறார். அவரது நிலை ஒரு மாநில ஆளுநரின் நிலை போன்றது. இதனைத் தன்னால் நியமிக்கப்படும் ஆட்சியாளர் ஒருவரால் நிர்வகிக்கிறார். அந்த ஆட்சியாளர் லெப்டினேன்ட் கவர்னர் என அழைக்கப்படுகிறார். எனவே யூனியன் பிரதேசத்திற்கு எதிராகத் தொடரப்படும் வழக்கு, மைய அரசுக்கு எதிராகத் தொடுக்கப்படக் கூடாது. ஆட்சியாளரால் பிரதிநிதித்துவம் பெறும் யூனியன் நிர்வாகத்திற்கு எதிராக வழக்குத் தொடரப்பட வேண்டும். உறுப்பு 239இன் கீழ் நியமிக்கப்படும் ஆட்சியாளர், ஒரு மாநில ஆளுநர் போன்ற அரசமைப்புப் பணியாளர் அல்லர். யூனியர் பிரதேச அமைச்சர்களின் அறிவுரைக்குக் கட்டுப்பட்டவர் அல்லர்.

அவர் குடியரசுத் தலைவரின் சார்பாளர் ஆதலால், அமைச்சர் குழுவின் அறிவுரைக்கு வேறுபடும்போது குடியரசுத் தலைவரின் உத்தரவிற்கு இணங்கச் செயல்படலாம்.

யூனியன் பிரதேமானது, ஆட்சியாளர் வாயிலாக மட்டுமின்றி, அருகிலுள்ள ஒரு மாநில ஆளுநரால் கூட நிர்வகிக்கப்படலாம். இந்தத் தகுதியில், அமைச்சர் குழுவின் அறிவுரைப்படி நிர்வகிக்கத் தேவையில்லை.

தற்போது (1) அந்தமான் நிக்கோபார் தீவுகள் ; (2)சண்டிகர் ; (3) டாக்ரா மற்றும் நாகர் ஹவேலி; (4) டாமன் மற்றும் டையூ; (5) டில்லி; (6) இலட்சத் தீவுகள் மற்றும் (7) பாண்டிச்சேரி என்ற யூனியன் பிரதேசங்கள் உள்ளன. இதில் டில்லிக்கு 1992 இல் 69வது அரசமைப்புச் சட்டத்திருத்தம் வாயிலாகச்

சிறப்பு தகுநிலை வழங்கப்பட்டுள்ளது. இது தற்போது தேசியத் தலைநகர் பகுதி டில்லி (The National Capital Territory of Delhi) என் அழைக்கப்படுகிறது.

அந்தமான் நிக்கோபார் தீவுகள், டில்லி மற்றும் பாண்டிச்சேரி ஆட்சியாளர்கள் லெப்டினென்ட் கவர்னர்கள் (Lieutenat Governors) என்றும் சண்டிகரின் ஆட்சியாளர் முதன்மை ஆட்சியாளர் (Cheif Commissioner) என்றும் அழைக்கப் பெறுகின்றனர். எனினும் பஞ்சாபின் ஆளுநரே, சண்டிகரின் ஆட்சியாளரும் ஆவார். டாக்ரா மற்றும் நாகர் ஹவேலியின் ஆட்சியாளர், டாமன் மற்றும் டையூவின் ஆட்சியாளர் ஆவார். இலட்சத்தீவிற்குத் தனி ஆட்சியாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசியத்தலைநகர் பகுதி டில்லி மற்றும் பாண்டிச்சேரி ஆகியவை சட்டப் பேரவையும் அமைச்சர் குழுவும் பெற்றிருக்கின்றன.

### சில யூனியன் பிரதேசங்களுக்குச் சட்டப் பேரவையும் அமைச்சர் குழுவும்

1962ஆம் ஆண்டின் பதினான்காம் அரசமைப்புச் சட்டத்திருத்தம் புதியதாக உறுப்பு 239Aயை உருவாக்கிச் சில யூனியன் பிரதேசங்களுக்குத் தனியே சட்டமன்றமும் அமைச்சர் குழுவும் ஏற்படுத்த வழிவகை செய்துள்ளது. இதற்கான சட்டம் உறுப்பு 368இன் கீழ் அரசமைப்புச் சட்டத் திருத்தம் ஆகாது.

### டில்லியைக் குறித்த சிறப்புச் சட்ட வாசகங்கள்

உறுப்புகள் 239AA, 239AB என்ற புதிய உறுப்புகள் 1992 இல் அறுபத்து ஒன்பதாம் அரசமைப்புச் சட்டத்திருத்தத்தால் கொண்டு வரப்பட்டவை. உறுப்பு 239AA (1) இன்படி இனி டில்லியானது தேசியத் தலைநகர்ப்பகுதி டில்லி என அழைக்கப்பெறும்

தனது யூனியன் பிரதேசம் குறித்துப் பாண்டிச்சேரி, அரசமைப்பின் ஏழாம் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள முதல் அல்லது இரண்டாவது பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் குறித்துச் சட்டமியற்றலாம். தேசியத் தலைநகர்ப் பகுதி டில்லி இரண்டாவது பட்டியலில் உள்ள இனங்கள் 1,2 மற்றும் 18 தவிர மற்றவைக் குறித்துச் சட்டமியற்றலாம். சில மசோதாக்கள் குறித்துக் குடியரசுத் தலைவரின் முன் அனுமதி பெற வேண்டும்.

உறுப்பு 239AA மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டப்பேரவையைத் தேசியத் தலைநகர்ப் பகுதி டில்லிக்கு ஏற்படுத்த வழிவகை செய்துள்ளது. மேலே குறிப்பிட்டபடி, தனது பிரதேசம் குறித்து மாநில மற்றும் பொதுப்பட்டியலில் குறிப்பட்டபடி (இனங்கள் 1,2 மற்றும் 18 தவிர) சட்டமியற்ற அதிகாரம் உண்டு. முதலமைச்சர் தலைமையில் மொத்த உறுப்பினர்களில் பத்து சதத்திற்கு மேற்படாத அமைச்சர் குழுவும் உண்டு. இதில் குறிப்பிடப்பட்ட வாசகங்கள் மற்ற மாநிலங்களில் உள்ளது போன்றதாகும். உறுப்பு 239AA இன் சட்ட வாசங்களுக்கு இணங்க நிர்வகிக்க முடியாத ஒரு சூழ்நிலை உருவாகுமேயானால், லெப்டினென்ட் கவர்னரின் அறிக்கை மீது, உறுப்பு 239AA இன் எந்த ஒரு வாசகத்தையும் குடியரசுத் தலைவர் நிறுத்தி வைக்கலாம்.

**அவசரச் சட்டம் இயற்ற ஆட்சியாளருக்கு அதிகாரம்**

யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரியின் சட்டமன்றம் அமர்வில் இல்லாதபோது, உறுப்பு 239B யின் கீழ் ஆளுநர் அவசரச் சட்டம் (ordinance) பிறப்பிக்கலாம். ஆனால் குடியரசுத் தலைவரின் முன் அனுமதியின்றிப் பிறப்பிக்க இயலாது. இதற்குச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் போன்ற வலிமையுண்டு. பின்னர் சட்டமன்றம் முன் அது வைக்கப்பட வேண்டும்.

**குடியரசுத் தலைவருக்குச் சில ஒழுங்குமுறைகள் ஏற்படுத்த அதிகாரம்**

யூனியன் பிரதேசங்களான அந்தமான நிக்கோபார் தீவுகள், டாக்ரா மற்றும் நாகர் ஹவேலி, டாமன் மற்றும் டையூ, மற்றும் பாண்டிச்சேரி குறித்து அமைதி, முன்னேற்றம், நல்லரசு ஆகியவற்றிற்காக உறுப்பு 239இன் கீழ் ஒழுங்கு முறைகளைக் கொண்டு வரலாம். பாண்டிச்சேரி குறித்துச் சட்டமன்றம் ஏற்படுத்தப்பட்டிருப்பின் இந்த உறுப்புப் பொருந்தாது.

**யூனியன் பிரதேசங்களுக்கான உயர்நீதிமன்றங்கள்**

உறுப்பு 241, ஒரு யூனியன் பிரதேசத்திற்காக ஓர் உயர்நீதிமன்றத்தை அமைக்க அல்லது மற்ற உயர்நீதிமன்றத்தை அதற்கான உயர்நீதிமன்றமாகக் குடியரசுத் தலைவர் அறிவிக்க வழி வகை செய்துள்ளது. இதற்காக அரசமைப்பின்பகுதி VIஇன் அத்தியாயம் Vஇன் சட்ட வாசகங்கள் இதற்குப் பொருந்தும். இனி எந்தெந்த யூனியன் பிரதேசங்களுக்கு எந்தெந்த உயர்நீதிமன்றங்கள் ஆள்வரை கொண்டுள்ளது என்பதைப் பார்ப்போம்.

| யூனியன் பிரதேசம் | | உயர்நீதிமன்றம் |
|---|---|---|
| 1 | அந்தமான் நிக்கோபார் தீவுகள் | கல்கத்தா |
| 2 | சண்டிகர் | பஞ்சாப் மற்றும் ஹரியானா |
| 3 | டாக்டரா மற்றும் நாகர் ஹவேலி | பம்பாய் |
| 4 | டாமன் மற்றும் டையூ | பம்பாய் |
| 5 | டில்லி | டில்லி |
| 6 | இலட்சத்தீவுகள் | கேரளா |
| 7 | பாண்டிச்சேரி | சென்னை |

**அட்டவணை மற்றும் மலைச்சாதி பகுதிகள்**

உறுப்புகள் 244 மற்றும் 244A அட்டவணை மற்றும் மலைச்சாதி பகுதி (scheduled and tribal areas) ஆகியவற்றின் நிர்வாகம் பற்றிக் கூறுகின்றன. ஐந்தாவது அட்டவணை, அட்டவணைப் பகுதி மற்றும் மலைச்சாதியினரின் நிர்வாகம் குறித்து விரிவான சட்ட வாசகங்களைக் கொண்டுள்ளது. மலைச் சாதியினர் என்பவர் உறுப்பு 342ல் குறிப்பிடப்பட்டுள்ளார். அட்டவணைப் பகுதி என்பது ஆறாம் அட்டவணையில் உள்ள அசோம், மேகாலயா, திரிபுரா மற்றும் மிசோராம் போன்ற மாநிலங்களில் உள்ள மலைச்சாதியினரின் பகுதிகள் ஆகும். குடியரசுத் தலைவர் எப்பகுதியையும் அட்டவணைப்பகுதி என அறிவிக்கலாம்.

## வினாக்கள்

1. யூனியன் பிரதேசங்களின் நிர்வாகம் பற்றி எழுதுக.
2. யூனியன் பிரதேசங்களின் சட்டப்பேரவை மற்றும் அமைச்சர் குழு பற்றி விவரிக்க.